ரூ.3.40 லட்சத்துக்கு தேங்காய், தேங்காய்ப் பருப்புகள் விற்பனை

வெள்ளக்கோவில், செப். 21: வெள்ளக்கோவிலை அடுத்த முத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய், தேங்காய்ப் பருப்பு ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதற்கு சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 3214 கிலோ தேங்காய், 2040 கிலோ தேங்காயப் பருப்பு ஆகிவயற்றை விற்பனைக்குக் கொண்டுவந்திருந்தனர்.

இதில் ஒரு கிலோ தேங்காய் ரூ.30.80 முதல் ரூ. 44.80 வரை ரூ.1.13 லட்சத்துக்கும், தேங்காய்ப் பருப்பு கிலோ ரூ.85.20 முதல் ரூ.123.75 வரை ரூ.2.27 லட்சத்துக்கும் விற்பனையாயின. இந்த ஏலத்தில் மொத்தமாக ரூ.3.40 லட்சம் மதிப்பிலான தேங்காய், தேங்காய்ப் பருப்புகள் விற்பனையாயின என்று ஒழுங்குமுறை விற்பனைக் கூட மேற்பார்வையாளர் து.சங்கீதா தெரிவித்தார்.

நீர்நிலைகளில் குப்பைகள் கொட்டுவதைத் தடுக்க வலியுறுத்தல்

திருப்பூர், செப். 21: திருப்பூர் மாவட்டத்தில் நீர்நிலைகளில் குப்பைகள் கொட்டுவதைத் தடுக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.காளியப்பன் அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

திருப்பூர், ஈரோடு, கோவை மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் கனவு திட்டமான அத்திக்கடவு - அவிநாசி திட்டம் பல கட்ட போராட்டங்களுக்கு பிறகு தற்போதுதான் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இத்திட்டத்தில் விடுபட்டுள்ள குட்டைகளை இணைக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள குட்டையில் மலைபோல குப்பையைக் கொட்டியுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சிக்குள்பட்ட முட்டியங்கிணறு பகுதியில் அமைந்துள்ள குட்டை அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுற்றுவட்டாரப் பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை ஊராட்சி நிர்வாகம் இந்தக் குட்டையில் கொட்டி வருகிறது. இதனால், துர்நாற்றம் வீசுவதால் அக்கம்பக்கத்தில் வசிக்க முடியவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். மேலும், நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு, பயன்படுத்த முடியாத நிலைக்கு மாறி உள்ளது.

எனவே, ஊராட்சி நிர்வாகம் குட்டையில் குப்பைகள் கொட்டுவதைத் தடுப்பதுடன், ஏற்கெனவே கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குப்பைக் கிடங்கில் இருந்து வைர நகையை மீட்டுக் கொடுத்த மாநகராட்சி ஊழியர்

ஈரோடு, செப்.21: குப்பையில் தவறவிட்ட ரூ. 18 ஆயிரம் மதிப்புள்ள வைரத் தோடுகளை மாநகராட்சி தூய்மை மேற்பார்வையாளர் குப்பைகிடங்கில் இரவில் தேடி கண்டெடுத்து உரிமையாளரிடம் ஒப்படைத்த சம்பவம் பலரின் பாராட்டைப் பெற்றுள்ளது.

ஈரோடு பொன் வீதியில் 50-க்கும் மேற்பட்ட நகை கடைகள் செயல்பட்டு வருகின்றன. இப்பகுதியில் செயல்பட்டு வரும் பிரபல நகைக் கடையில் ரூ. 18 ஆயிரம் மதிப்புள்ள ஒரு ஜோடி வைரத் தோடு இல்லாமல் இருப்பது இரவு கணக்கு பார்க்கும்போது தெரியவந்துள்ளது. இந்த வைரத் தோடுகள் குப்பையுடன் கலந்து போயிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தது. நகைக் கடை உரிமையாளர், சுகாதார ஆய்வாளர் நல்ல சாமியிடம் இதுகுறித்து தெரிவித்தார். பின்னர் மாநகராட்சி தூய்மை மேற்பார்வையாளர் விக்னேஸ்வரன், சக ஊழியர்களின் உதவியுடன் வெண்டிபாளையம் குப்பைக்கிடங்கில் வெள்ளிக்கிழமை இரவு தீவிரமாகத் தேடியுள்ளனர். நீண்ட நேரத் தேடலில் நகைக் கடையில் தவறவிட்ட வைரத்தோடுகளை குப்பையில் இருந்து கண்டெடுத்தனர். இதையடுத்து மாநகராட்சி தூய்மை மேற்பார்வையாளர் விக்னேஸ்வரன் சக ஊழியர்களுடன் சனிக்கிழமை காலை சென்று வைரத் தோடுகளை நகைக்கடை உரிமையாளரிடம் ஒப்படைத்தார். இவரின் செயலை பலரும் பாராட்டி வருகின்றனர்.

2026 தேர்தல் பாஜகவுக்கு முக்கியமானது

தமிழிசை சௌந்தரராஜன்

பல்லடம், செப். 21: 2026 தேர்தல் பாஜகவுக்கு முக்கியமானது என்று தெலங்கானா முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்தார்.

திருப்பூர் மாவட்டம், பொங்கலூரில் பாஜகவின் உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில், பங்கேற்ற தெலங்கானா முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

தமிழகம் முழுவதும் பாஜக உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. 2026 தேர்தல் எங்களுக்கு மிக முக்கியமான தேர்தல். 2024 தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை என்றாலும் அது ஒரு நம்பிக்கையை அளித்திருக்கிறது.

தமிழகத்தில் ஒரு மாற்றம் வந்தாக வேண்டும் என்ற சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. திமுக ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சரியில்லை. போதைப் பொருள்களின் புழக்கம் அதிகரித்துள்ளது.

கூட்டத்தில் பேசுகிறார் தெலங்கானா முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன்.

கூட்டணிக் கட்சித் தலைவரே மதுவிலக்கு மாநாடு நடத்த உள்ளார். இப்படிப்பட்ட சூழலில் தமிழகத்தில் நிச்சயமாக ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். இதற்கு பாஜகவின் உறுப்பினர் சேர்க்கை மிகப்பெரிய வாய்ப்பாக அமையும். பாஜகவில் இளைஞர்கள் அதிக ஆர்வத்துடன் தங்களை இணைத்துக்கொண்டு வருகின்றனர் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாநிலச் செயலாளர் மலர்கொடி தர்மராஜ், மாவட்ட பொதுச் செயலாளர் சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாய்கள் கடித்து இறக்கும் கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க கோரிக்கை

திருப்பூர், செப். 21: திருப்பூர் மாவட்டத்தில் நாய்கள் கடித்து இறக்கும் கால்நடைகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாவட்டச் செயலாளர் செ.முத்துகண்ணன் அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

திருப்பூர் மாவட்டத்தில் நாய்கள் கூட்டமாக சேர்ந்து ஆடுகள், கன்று குட்டிகளை கடித்து வருகின்றன.

இந்நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்பு மறவாபாளையம் கிராமத்தில் விவசாயி பொன்னுசாமியின் பட்டியில் இருந்த நாய்கள் கடித்ததில் 16 ஆடுகள் உயிரிழந்தன.

அதேபோல காங்கயம் நகராட்சி தொட்டியபட்டியில் விவசாயி மோகன்குமார் தோட்டத்தில் உள்ள பட்டியில் நாய்கள் கடித்ததில் 30 செம்மறி ஆடுகள் உயிரிழந்தன. இதனால், ஆடுகளை வைத்து பிழைப்பு நடத்தி வரும் விவசாயிகளின் வாழ்வாதரம் கேள்விக்குறியாகியுள்ளது.

இது தொடர்பாக குறைகேட்புக் கூட்டங்களில் விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் பல முறை புகார் தெரிவித்தும் மாவட்ட நிர்வாகமும், அரசும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் இதுபோன்ற பல சம்பவங்கள் அண்மையில் நடைபெற்றுள்ளன. கால்நடைகளை நாய்கள் தாக்கும் பிரச்னையில் எங்களுக்கு பொறுப்பு இல்லை என்று கால்நடை பராமரிப்புத் துறை தெரிவிக்கிறது.

நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டிய உள்ளாட்சி நிர்வாகங்கள் இதைப் பற்றி கண்டுகொள்வதில்லை. எனவே, விவசாயிகளின் முக்கிய வாழ்வாதரமாக உள்ள ஆடு, மாடுகளை தெருநாய்களிடம் இருந்து பாதுகாப்பதற்கு அரசு உரிய திட்டங்களையும், செயல்பாடுகளையும் வகுக்க வேண்டும். மேலும், பாதிப்புக்குள்ளாக்கும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கயத்தில் சர்வசமய கூட்டுப் பிரார்த்தனை

காங்கயத்தில் நடைபெற்ற சர்வசமய கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

காங்கயம், செப். 21: சர்வதேச அமைதி தினத்தையொட்டி காங்கயத்தில் சர்வசமய கூட்டுப் பிரார்த்தனை சனிக்கிழமை நடைபெற்றது.

காங்கயம் ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன் யோகாஸ்ரம தியான மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஹார்ட்ஃபுல்னஸ் அமைப்பின் காங்கயம் மைய ஒருங்கிணைப்பாளர் எஸ். கே.செந்தில்குமார் தலைமை வகித்தார்.

இதில் ஹிந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் பல்வேறு சமயத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்று உலக நன்மைக்காக கூட்டுப் பிரார்த்தனை செய்தனர். தொடர்ந்து மரக்கன்றுகள் நடப்பட்டன.

இதில், ஹார்ட்ஃபுல்னஸ் அமைப்பின் நிர்வாகி எம். சுப்பிரமணியம், யோகாஸ்ரம நிர்வாகக் குழு உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

திருப்பூர் தொழிலதிபரிடம் ரூ.77.50 லட்சம் மோசடி: 4 பேர் கைது

திருப்பூர், செப். 21: திருப்பூரைச் சேர்ந்த தொழிலதிபரிடம் ரூ.77.50 லட்சம் மோசடி செய்த 4 பேரை போலீஸார் கைது செய்தனர்.

திருப்பூரைச் சேர்ந்த தொழிலதிபர் சுப்பிரமணி, அண்மையில் கைப்பேசியில் இன்ஸ்டாகிராம் பார்த்துக் கொண்டிருந்தார். அதில் பங்குச் சந்தையில் பங்குகளை வாங்கி லாபம் பெறுவது தொடர்பான விளம்பரம் வந்துள்ளது.

அதற்குள் சென்றபோது ஒரு வாட்ஸ் ஆப் குழுவில் அவரது கைப்பேசி எண்ணை இணைத்துள்ளனர். பின்னர், ஒரு லிங்க் அனுப்பி பணத்தை முதலீடு செய்து பங்குகளை விற்பதன்மூலம் அதிக லாபம் கிடைக்கும் என்று தெரிவித்துள்ளனர். இதையடுத்து, சுப்பிரமணி தனது பெயரில் கணக்குத் தொடங்கி பல தவணைகளாக ரூ.77.50 லட்சம் முதலீடு செய்துள்ளார். அதன்பின், முதலீட்டுக்கான லாபமும் கிடைக்காமல், முதலீடு செய்த பணத்தையும் பெற முடியாமல் ஏமாற்றமடைந்துள்ளார். இது குறித்து திருப்பூர் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் உள்ள சைபர் கிரைமில் புகார் அளித்துள்ளார்.

அதன்பேரில் போலீஸார் நடத்திய விசாரணையில், சென்னை எல்லீஸ் நகரைச் சேர்ந்த தவ்பீக் (28), சேப்பாக்கத்தைச் சேர்ந்த ஷேக் முகமது (26), கேரள மாநிலம், மலப்புரத்தைச் சேர்ந்த அப்துல் முனாஸ் (23), இளையான்குடியைச் சேர்ந்த முகமது ஹர்ஷத் (23) ஆகியோர் மோசடி செய்தது தெரியவந்தது. இதையடுத்து, சென்னையில் இருந்த 4 பேரையும் சைபர் கிரைம் காவல் துறையினர் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

வெள்ளக்கோவிலில் 27 தெருநாய்களுக்கு கருத்தடை

வெள்ளக்கோவில், செப். 21: வெள்ளக்கோவில் நகராட்சியில் 27 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

வெள்ளக்கோவில் நகராட்சியில் சுற்றுத்திரியும் தெருநாய்களால் கால்நடைகள், மனிதர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு வருவதால் அவற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் வலியுறுத்தி வந்தனர்.

இதையடுத்து நகராட்சித் தலைவர் கனியரசி முத்துக்குமார், நகராட்சி ஆணையர் எஸ்.வெங்கடேஷ்வரன் உத்தரவின்பேரில் தனியார் அறக்கட்டளையுடன் இணைந்து நகராட்சிப் பணியாளர்கள் தெருநாய்கள் பிடிக்கும் பணியில் சனிக்கிழமை ஈடுபட்டனர்.

அதன்படி முத்தூர் சாலை, புதிய பேருந்து நிலையப் பகுதிகளில் திரிந்த 27 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, வெறிநோய் தடுப்பூசி போடப்பட்டு பிடித்த இடத்திலேயே மீண்டும் விடப்பட்டன.

கொலை வழக்கு குற்றவாளிகள் 3 பேர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தில் நடவடிக்கை

திருப்பூர், செப். 21: திருப்பூர் மாநகரில் கொலை வழக்கில் கைதான 3 பேர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் சனிக்கிழமை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருப்பூரை அடுத்த கணக்கம்பாளையம் கல்லாங்காடு பகுதியைச் சேர்ந்தவர் புவனேஸ்வரன் என்கிற அன்பு (23). இவரது கைப்பேசியில் இருந்த ஆபாச புகைப்படத்தை இவருக்குத் தெரியாமல் இவரது நண்பர்கள் தங்களது கைப்பேசியில் பதிவு செய்துகொண்டு பணம் கேட்டு மிரட்டியுள்ளனர்.

இதுதொடர்பாக ஏற்பட்ட பிரச்னையில் கூத்தம்பாளையத்தைச் சேர்ந்த கே.சூர்யமூர்த்தி (27), பெருமாநல்லூரைச் சேர்ந்த கே.உதயதர்ஷன் (24), பி.ருத்ரமூர்த்தி (24) ஆகியோர் அன்புவை கடந்த ஜூலை 3-ஆம் தேதி கொலை செய்துள்ளனர்.

இது தொடர்பாக அனுப்பர்பாளையம் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்தனர்.

இந்நிலையில், பொது அமைதிக்கும், பொதுமக்களுக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் தொடர் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததால், கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள 3 பேரையும் குண்டர் தடுப்புச் சட்டத்தில் ஓராண்டு சிறையில் அடைக்க மாநகர காவல் ஆணையர் எஸ்.லட்சுமி உத்தரவிட்டுள்ளார்.

சிறுமிக்கு பாலியல் தொல்லை: இளைஞர் கைது

ஈரோடு, செப். 21: திருமண விழாவில் 16 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த இளைஞரை, போக்ஸோ சட்டத்தின் கீழ் போலீஸார் கைது செய்தனர். இந்த புகார் குறித்து நடவடிக்கை எடுக்கத் தாமதம் செய்த ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர், ஆயுதப்படைக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

ஈரோடு பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமி தனது பெற்றோருடன் கடந்த சில மாதங்களுக்கு முன்பு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள உறவினர் வீட்டுத் திருமண விழாவுக்குச் சென்றிருந்தார். அப்போது, அதே பகுதியைச் சேர்ந்த தனியார் நிறுவன ஊழியரும், உறவினருமான இளந்தமிழன் (26) என்பவர் சிறுமியிடம் நெருங்கிப் பழகி, பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து திருமண விழா முடிந்து ஈரோடு திரும்பிய சிறுமி பெற்றோரிடம் கூறியுள்ளார். அதிர்ச்சி அடைந்த பெற்றோர் ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். போலீஸார் விசாரணை நடத்தி, போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவுசெய்து விழுப்புரம் மாவட்டம், பாக்கம், வாட்டர் டேங்க் வீதியைச் சேர்ந்த இளந்தமிழனை சனிக்கிழமை கைது செய்தனர். பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, ஈரோடு கிளை சிறையில் அடைத்தனர்.

கைதான இளந்தமிழனுக்கு திருமணமாகி ஒரு குழந்தை உள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

காவல் ஆய்வாளர் ஆயுதப்படைக்கு மாற்றம்: சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தது தொடர்பான புகாரில் நடவடிக்கைஎடுக்காமல்ஈரோடு அனைத்துமகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ராஜநளாயினி காலதாமதம் செய்து அலைக்கழித்துள்ளார். இதனால் அதிருப்தி அடைந்த பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.ஜவகரிடம் புகார் அளித்தனர். இதையடுத்து, ஆய்வாளர் ராஜநளாயினியை ஈரோடு ஆயுதப்படைக்கு பணியிட மாற்றம் செய்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவிட்டார்.

முத்தூர் அருகே 3 கிலோ குட்கா பறிமுதல்

வெள்ளக்கோவில், செப். 21: வெள்ளக்கோவிலை அடுத்த முத்தூர் அருகே 3 கிலோ குட்கா பறிமுதல் செய்யப்பட்டது.

வெள்ளக்கோவில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள், போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக போலீஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து வெள்ளக்கோவில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குமார் முத்தூர் பகுதியில் சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, கொடுமுடி சாலையில் ஜெகதீஷ் (46) என்பவருடைய மளிகைக் கடையில் 3 கிலோ குட்கா பறிமுதல் செய்யப்பட்டது. இதையடுத்து, அவரை போலீஸார் கைது செய்தனர்.

பொதுமக்களுக்கு இடையூறு: தலைமைக் காவலர் பணியிடை நீக்கம்

அவிநாசி, செப். 21: சேவூரில் மது அருந்திவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய தலைமைக் காவலர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அவிநாசி அருகே உள்ள சேவூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணியாற்றி வந்தவர் செல்லக்கண்ணு (38). இவர், தனது நண்பர்களான அருண்குமார் , தினேஷ்குமார் ஆகியோருடன் சேவூர் அருகே வியாழக்கிழமை பொது இடத்தில் மது அருந்திவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளார்.

இதையடுத்து பொதுமக்கள் அளித்த புகாரின்பேரில் 3 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், மது அருந்துவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய தலைமைக் காவலர் செல்லக்கண்ணுவை பணியிடை நீக்கம் செய்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக்குப்தா உத்தரவிட்டுள்ளார்.

SHRIRAM Finance

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட், சட்ட துறை, எண்.145, சாந்தோம் நெடுஞ்சாலை, (3வது தளம்), மயிலாப்பூர், சென்னை - 600 004. போன் : 044 - 4606 8200

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்காக)

செக்யூரிடைசேஷன் மற்றும் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் ஆக்ட் 2002 (54/2002) சட்டப்பிரிவு 13(12) மற்றும் விதி 3-ன் படி **M/s. ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட்,** (M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்-டுடன் இணைக்கப்பட்டதிலிருந்து)-ன் கீழே கையொப்பமிட்ட நான்கீராம் பெற்ற அதிகாரி மூலம் **(i) M/s. புளூ நேஷன் க்னாலிங் கம்பெனி (கடன்தாரர்),** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் **திரு.R.மதியழகன்,** எண்.1124/8C, கங்கா நகர், பேயம்பாளையம், P.N. சாலை, சரண் மருத்துவமனை அருகில், திருப்பூர் - 641 602 , **(ii). திரு. R. மதியழகன் (ஜாமீன்தாரர்),** த/பெ. திரு. ராஜரத்தினம், **(iii). திருமதி. G. அருணா (ஜாமீன்தாரர்),** க/பெ. திரு. R. மதியழகன், **இருவரின் முகவரி :** எண்.2/1, முத்துமாணிக்கம் காம்பவுண்டு, 1வது தெரு, கந்தசாமி மனை பிரிவு, சக்தி தியேட்டர் சாலை அருகில், திருப்பூர் - 641 602. **(iv). திரு. R. கார்த்திக் (ஜாமீன்தாரர்),** த/பெ. திரு. ராஜரத்தினம், எண்.1135, கங்கா நகர், பேயம்பாளையம், தொட்டிப்பாளையம், சரண் மருத்துவமனை அருகில், திருப்பூர் - 641 602, **(v). திருமதி. K. அஸ்வினி (ஜாமீன்தாரர்),** க/பெ. திரு. R. கார்த்திக், எண்.37, சக்தி தியேட்டர் சாலை, பிச்சம்பாளையம், புதூர், திருப்பூர் - 641 802. **(vi). திரு. ராஜரத்தினம் (ஜாமீன்தாரர்)** த/பெ. திரு. தானப்பன் என்கிற திரு. தானப்பன், **(vii). திருமதி.R. உமாகாந்தி (ஜாமீன்தாரர்),** க/பெ. திரு. ராஜரத்தினம், **இருவரின் முகவரி :** எண்.82/1, குணாணகவுண்டர் பட்டி, கூடலூர், அய்யர்மலை கோவில் அருகில், கரூர் - 639 120 **(viii). திரு. P. அர்த்தநாரி (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ திரு. பெரியசாமி, எண்.381-1, கதிர்செட்டிபட்டி, முத்துநாயக்கன்பட்டி, மாரியம்மன் கோவில் அருகில், சேலம் - 636 304 ஆகியோர்களுக்கு **30.09.2023** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள **28.02.2022** தேதியிட்ட **TFHO1TF2202280003** எண்டர்பிரைஸ் பைனான்ஸ் கடன் ஒப்பந்தத்தின் படி **29.09.2023** அன்று வரை உள்ள கடன் பாக்கித் தொகையான **ரூ.89,07,964 /- (ரூபாய் எண்பத்து ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து நான்கு மட்டும்)** மேலும் **30.09.2023** அன்று முதல் பின்வட்டியுடன் சேர்த்து இந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 தினங்களுக்குள் செலுத்தும்படி கோரப்பட்டது.

மேற்கூறிய காட்டப்பட்டுள்ள படி கேட்பு அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனி மனு எண்கள் 69-76/2022-ல் ஒருங்கிணைப்பு திட்டத்தின் படி மாண்புமிகு தேசிய கம்பெனிகள் சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு அவர்களால் 09.11.2022 தேதியிட்ட அதன் உத்தரவின் படி அனுமதிக்கப்பட்ட 30.11.2022 முதல் இந்திய அரசு, பெறுநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் கீழ் பெயர் மாற்றம் சான்றிதழின் படி M/s. ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் கொண்ட கம்பெனி M/s.ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டதை தொடர்ந்து M/s.ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கம்பெனியானது **M/s.ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்** என்ற பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே இன்றைய தேதி வரை தற்போதைய அறிவிப்பு கடனளித்தவரான M/s. ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் மற்றும் கடன்தாரர் கடன் பாக்கி தொகையை திருப்பி செலுத்த தவறியதால் ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், கீழே கையொப்பமிட்டவர் மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் விதிகள் 8-ன் கீழ் தமது அதிகாரத்தை பயன்படுத்தி **20.09.2024** அன்று கீழே விரிவாக கொடுக்கப்பட்டுள்ள சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதமான பரிவர்தனைகளும் வைத்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பரிவர்தனை வைத்து கொண்டால் அது **M/s. ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்** -க்கு செலுத்த வேண்டிய எண்டர்பிரைஸ் பைனான்ஸ் கடன் கணக்கில் **29.09.2023** அன்று வரை உள்ள கடன் பாக்கித் தொகையான **ரூ.89,07,964 /-** மேலும் **30.09.2023** அன்று முதல் பின்வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு காண அவகாசம் உள்ளது என்று கடன்தாரர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

அட்டவணை சொத்துக்களின் விவரங்கள் : **அட்டவணை சொத்துக்கள்: தாராபுரங்கலம், துணை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 02.04.2018 தேதியிட்ட ஆவண எண்.1803/2018-ன்படி விடுதலை பத்திரம் மூலம் திரு.P.அர்த்தநாரி அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்து. வகை எண்.1:** சேலம் மேற்கு பதிவு மாவட்டம், தாராபுரங்கலம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட ஓமலூர் தாலுகா, முத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் சர்வே எண்.282/1A-ன் படி **0.74 ¼ ஏக்கர்** புஞ்சை நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து நுண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : திரு.வைத்தியலிங்கம் அவர்களுக்கு சொந்தமான நிலத்திற்கு கிழக்கே, திரு.அர்த்தநாரி அவர்களுக்கு சொந்தமான மீதமுள்ள நிலத்திற்கு மேற்கே, கிழக்கு மேற்கான வண்டிபாதைக்கு தெற்கே , திருமதி.சரோஜா அவர்களுக்கு சொந்தமான நிலத்திற்கு வடக்கே. மொத்தப்பரப்பளவு **0.74 ¼ ஏக்கர்** நிலம். **வகை எண்.2:** சேலம் மேற்கு பதிவு மாவட்டம், தாராபுரங்கலம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட ஓமலூர் தாலுகா, முத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் சர்வே எண்.282/1E-ன் படி **0.96 ½ ஏக்கர்** புஞ்சை நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து நுண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : திரு.ராமசந்திரன் மற்றும் திருமதி.சரோஜா ஆகியோர்களுக்கு சொந்தமான நிலத்திற்கு கிழக்கே, கிருஷ்ணகாந்த் அவர்களின் தரிவான நிலத்திற்கு மேற்கே, கிழக்கு மேற்கான வண்டிபாதைக்கு தெற்கே, திருமதி.சரோஜா, திரு.சின்னமுத்து மற்றும் திரு.அங்குசாமி ஆகியோர்களுக்கு சொந்தமான நிலத்திற்கு வடக்கே. மொத்தப்பரப்பளவு **0.96 ½ ஏக்கர்** புஞ்சை நிலம். துணை பிரிவின் படி சர்வே எண்.282/1E1. சொத்து நிலங்கள் **1.71 ¼ ஏக்கர்.** மற்றும் அங்கு தற்போதுள்ள கட்டுமானங்கள் மற்றும் கட்டப்படவுள்ள கட்டிடம்.

தேதி : 20.09.2024,
நேரம்: வகை எண்.1 : பிற்பகல் 12.15 மணி
& வகை எண்.2 : பிற்பகல் 12.20 மணி

அதிகாரப்பூர்வ அதிகாரி மற்றும் துணை பொது மேலாளர்
ஸ்ரீ ராம் பைனான்ஸ் லிமிடெட்
- (கடன் அளித்தவர்)

அசல் சொத்து ஆவணம் காணவில்லை

உடுமலைப்பேட்டை, கூழூர் கான் வீதி, புதிய கதவு எண்.24, பழைய கதவு எண்.10- ல் வசிக்கும் த/பெ கைலாச நாதர் அவர்களின் மகன் K.சுபாஷ் (வாக்காளர் அடையாள அட்டை எண். TN/21/111/0073120) சுமார் 70 வயதுடைய நான் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் உடுமலைப்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் **Document No. 3693 /2002** எண்ணாக பதிவு செ